ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

27.02.2025

1. ஞானபண்டிதன் நல் அருள்புரிய
ஞானிகள் பூசை நாளும் நடந்திட
ஞானத்தலைவனுடன் அரங்கன் யானும்
நாளும் நாளும் சோதியாய் நின்றருள

2. அருளவே தொண்டர்களை நோக்கி
அருட்சுவடி வழி அருளாசியாக
வரமென குரோதி சால் திங்களில்
வழங்க வந்தேன் சூலவாம் குருவார ஆசி

3. ஆசிதனை அரங்கமகானும் உரைப்பேன்
அளவிலா மகாசக்தியூட்டி இனிதே
ஆசிதனை குடிலின் அன்னதானத்தை
அருளமுதாக்கி மக்களுக்குத் தருகிறேன்

4. தருகவே உலக மக்களெல்லாம்
தங்களின் பிறவிப்பிணி அகல
வருகை தந்து பிரணவக் குடிலில்
வணங்கி சோதி வழிபாடு செய்து

5. செய்துமே அருளமுதை உண்டு
சீடன் ராம்குமார் கரம்பட
மெய்நிலை பெற சகல தீட்சையும்
முருகா அரங்கா என ஏற்றிட

6. ஏற்றிட எண்ணிய வண்ணம்
என் தடம் வருகின்ற மக்களுக்கு
மாற்றமாக எல்லாம் கைகூடும்
மறுமை வெல்லும் சக்தி கிட்டும்

7. கிட்டுமே தன்னை அறிந்து நன்கு
குவலயத்திற்கு வந்த நோக்கமும்
கட்டமிலா தெளிவு திடம் கண்டு
கருணை பிறக்க தருமவான்களாக

8. ஆகவே மாற்றம் தன்னையும்
அரங்கன் என் தருமவழியில்
மிகைபட பொருளுதவி செய்து
மேலான நிலைகள் அடைய நேரும்

9. நேருமைபட வாழும் வண்ணம்
நீதி நெறிமுறைகள் தன்னை
வருமுலகில் கடைப்பிடித்து நன்கு
வாழும் காலமே மேலவர்கள் மெச்ச

10. மெச்சவே நல் மக்களாகி
முருகப் பெருமானே தேர்வு செய்யும்
அச்சமில்லா ஞானவான்களாக
அணுகுபவர்கள் எல்லாம் தேறி

11. தேறியே அரங்கன் என் நோக்கமாக
தேறுவர் கோடான கோடி பேருள்
மாறுவர் ஞானியர் பெருமக்களாக
மகான் அரங்கன் என் ஆசிபட அடைவர்
குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி